1990 ஏப்ரல் 25]

முதியோர் கல்வித் திட்டத்தை விரிவாக்குதல்

*1575—திரு. ஆர். அண்ணாநம்பி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் கல்வித் திட்டத்தை விரிவாக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) டென்மார்க் அரசு உதவியுடன் 90,000 மீனவர்கள் ஐந்தாண்டு கால அளவிற்கு வயது வந்தோர் கல்வி பெற ஒரு திட்டம் அமுல்படுத்தப்படும். மேலும் தற்போது நடந்து வரும் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தை திருத்தி அமைத்து ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மக்கள் நலப் பணியாளர்கள் மூலம் இத்திட்டம் பரவலாக செயல்படுத்தப்படும்.

திருப்பூரில் விளையாட்டு அரங்கம் கட்டுதல்.

*3348—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், திருப்பூரில் ஒரு ஸ்டேடியம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விளையாட்டரங்கம் கட்டுவதற்குத் தகுந்த இடம் தேர்வு செய்வது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரம் சுமார் 3½ இலட்சத்திற்கும் அதிக மான மக்கள் தொகையுள்ளள ஒரு முக்கிய நகரமாகவும் தொடர்ந்து வளர்ந்து வருகிற ஒரு நகரமாக இருக்கிற காரணத்தால், நீண்ட நாட்களாக, இந்தக் கோரிக்கை பரிசீலயையில்